**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8035298

1. District : மாவட்டம் தஞ்சாவூர் | PS: காவல்நிலையம் ஊ.த.பி. தஞ்சை | Year: ஆண்டு 2017 | FIR No.: (மு.த.அ. எண்) 11/2017 | Date: நாள் 12.10.2017

2. (i) Act சட்டம்: 8, 13(1)(d) r/w 13(2) of PC Act | Sections பிரிவுகள்: 109 IPC
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 12.10.2017
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை 17.30 to 19.45 Hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | Time : நேரம் FIR Registered
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம் 12.10.17 / 21.15 Hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் பூதலூர் சார்பதிவாளர் அலுவலகம், 30 Km வட மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : | District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் சி. மகேஷ்வரன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர், தஞ்சாவூர் | (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. திரு.ம. கோகராஜன், இளநிலை உதவியாளர், (பொறுப்பு) சார்பதிவாளர்
   2. திரு. ரவிச்சந்திரன் S/o. பரமசிவம், அலுவல எழுத்தர், பூதலூர் பூதலூர்,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

2

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்பட்டது:

இன்று 12.10.2017ம் தேதி 21.15 மணிக்கு, தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, தஞ்சாவூர் ஆய்வுக் குழு அலுவலர் திரு.எஸ்.மகேஸ்வரன் அவர்கள் அளித்த அறிக்கை மீது வழக்கு பதிவு செய்த விபரம்: அனுப்புநர், திரு.சு.மகேஷ்வரன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர். (இருப்பு), தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர். அம்மா, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராகிய நானும், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர்-II திருமதி.V.ஜோஸ்பின் ஜெனிபர் மேரி என்பவரும் தகவல்படி தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் காண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் 12.10.2017-ம் தேதி மாலை 17.30 மணி முதல் 19.45 மணிவரை பூதலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. திடீர் சோதனையின்போது பத்திர எழுத்தர் ரவிச்சந்திரன் என்பவர் சார் பதிவாளருக்கு கொடுக்க வைத்திருந்த தொகையான ரூ.23,280/- கைப்பற்றப்பட்டது. இத்திடீர் சோதனையின் போது தயார் செய்யப்பட்ட, திடீர் சோதனை நடவடிக்கையுடன் மேற்படி கைப்பற்றப்பட்ட தொகை ரூ.23280/- ஆஜர்படுத்துகிறேன். இதுகுறித்து சட்டப்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். (Sd-) சு.மகேஷ்வரன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர். (இருப்பு) தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள். திடீர் சோதனை நடவடிக்கை விபரம்:

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 12.10.17 TSO Tanjore

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

(signature) 12/10/17

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் P. PADMAVATHI
Rank: நிலை Insp. ...... No. எண் ......
V & AC, Thanjavur
12.10.17

2017ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12ம் ஆம் தேதி தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து, பூதலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் கையூட்டு பெறுவதாக, தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.எஸ்.மகேஸ்வரன் ஆகிய எனக்கு கிடைத்த தகவலின் பேரில் இன்று (12.10.2017) வியாழக் கிழமை 17.30 மணிக்கு பூதலூர் சார் பதிவாளர் அலுவலகத்தை நானும், திருமதி.வி.ஜோஸ்பின் ஜெனிபர்மேரி, மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர்-II என்பவரும் தஞ்சாவூர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் திடீர் சோதனை மேற்கொண்டபோது தயார் செய்யப்பட்ட நடவடிக்கை விபரம். இந்த திடீர் சோதனை 12.10.2017 ஆம் தேதி 17.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது.

**இந்த திடீர் சோதனையின்போது மாவட்டக் ஆய்வுக் குழுவினர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவில் இருந்த அலுவலர்கள் விபரம்**

1) திரு.எஸ்.மகேஸ்வரன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மாவட்டம்.

2) திருமதி.வி.ஜோஸ்பின் ஜெனிபர்மேரி, மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர்-II, தஞ்சாவூர் மாவட்டம்.

3) திரு.S.ராமதாஸ், காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர்.

(4) திருமதி.P.பத்மாவதி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர்.

(5) திருமதி.R.தமிழ்செல்வி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர்.

திடீர் சோதனையின் போது திரு.M.நாகராஜன், இளநிலை உதவியாளர், பொறுப்பு சார் பதிவாளர், பூதலூர் என்பவரிடம் விசாரித்த போது, தான் மட்டும் இவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், அதனால் அலுவலக உதவியாளராக இதே அலுவலகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற சம்மந்தமூர்த்தி என்பவரை பதிவு குறித்த கணக்குகளை பார்க்க உதவிக்கு வைத்துள்ளேன். அதேபோல் பூதராயநல்லூரைச் சேர்ந்த சத்தியமூர்த்தி த/பெ.மூக்கையன் என்பவரை அலுவலக உதவியாளராக வைத்துள்ளேன் என்றும். மேலும் கேமரா இயக்குவதற்கு Elcot பணியாளர் திருமதி.பியூலாசத்தியா என்பவர் உள்ளார் என்றும் தெரிவித்தார். மேற்படி அனைவரும் அலுவலகத்தில் பணியில் இருந்தனர்.

பூதலூர் சார் பதிவாளர் அலுவலகத்தின் வருகைப் பதிவேடு மற்றும் தனிநபர் பணப்பதிவேடு ஆகியவற்றை கேட்க, சார் பதிவாளர் பதிவேடுகளை எடுத்து ஆஜர் படுத்தினார். தனிநபர் பணப்பதிவேட்டில் 09.10.2017 தேதிவரை மட்டுமே பதிவுகள்

மேற்கொள்ளப்பட்டிருந்தது 12.10.2017ம் தேதிக்குறிய குறிப்புகள் எதுவும் இல்லை. சார் பதிவாளரிடம் இன்றைய பத்திர பதிவுக்குறிய விவரம் கேட்க, D-கணக்கு மட்டும் தான் பார்ப்பதாகவும், அதற்குறிய தொகை ரூ.7909/- என்றும், மேற்படி D-அக்கவுண்ட் படி வசூல் செய்யப்பட்ட தொகையை தனது மேஜையின் வலது பக்க டிராயரில் இருந்து எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி தொகையை சரிபார்க்க அதில் ரூ.7200/- மட்டும் இருந்தது. ரூ.709/- குறைவாக இருந்தது. இது குறித்து சார் பதிவாளர் (பொறுப்பு) அவர்களிடம் கேட்க கவனக்குறைவாக வசூல் செய்துவிட்டதாக கூறினார். மற்ற கணக்குகளை ஒய்வு பெற்ற அலுவலக உதவியாளர் சம்மந்தமூர்த்தி என்பவர் பார்த்து வருவதாகவும் தெரிவித்தார். சம்மந்தமூர்த்தியிடம் விசாரிக்க தான் பார்க்கும் கணக்குகளுக்கான வசூல் தொகை என சப்டிவிசன் கணக்கில் ரூ.560/-ம், CD fees ரூ.1000/-, A-கணக்கு 2760/-, 41-கணக்கு ரூ.1605/- ஆக மொத்தம் ரூ.5925/- இருக்கவேண்டும் என கூறி அதற்குறிய வசூல் தொகையை எடுத்து ஆஜர் செய்தார். அதை சரிபார்க்க, அதில் ரூ.5911/- இருந்தது. ரூ.14/- குறைவாக இருந்தது. இது குறித்து விசாரிக்க, கவனக்குறைவாக வசூல் செய்துவிட்டதாக தெரிவித்தார்.

சார்-பதிவாளர் (பொறுப்பு) திரு.M.நாகராஜன் என்பவரிடம் விசாரிக்க, அவர் ரூ.40/- எடுத்து ஆஜர் செய்து, அது தனது சொந்த பணம் என கூறியதால், அதை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. சம்மந்தமூர்த்தியிடம் விசாரிக்க அவர் தன்னிடம் பணம் எதுவும் இல்லை என தெரிவித்தார். சத்தியமூர்த்தி என்பவரிடம் விசாரிக்க அவர் ரூ.350/- எடுத்து ஆஜர் செய்து, தனது சொந்த பணம் என கூறியதால், அதை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. Elcot Staff பியூலாசத்யா என்பவரிடம் விசாரிக்க ரூ.60/- எடுத்து ஆஜர் செய்து, அது தன்னுடைய சொந்த பணம் என தெரிவித்தார், அதை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

அலுவலகத்தினுள் பத்திரப்பதிவிற்காக ஆஜரில் இருந்த பொதுமக்களை விசாரிக்க (1) கலியராஜ் த/பெ.ரெங்கசாமி, நெடுங்குளம் என்பவர் நிலம் வாங்கியது தொடர்பாக பத்திர பதிவிற்கு வந்ததாகவும், பத்திர பதிவிற்காக சத்திவேல் என்ற பத்திர எழுத்தர் அலுவலகத்தில் உள்ள ரவிச்சந்திரன் என்ற பத்திர எழுத்தர் ரூ.10,000/- வாங்கியுள்ளதாகவும், அதற்கு விபரம் கேட்டபோது, சார் பதிவாளருக்கு பணம் கொடுக்கவும் சேர்த்து தான் வாங்கியதாக கூறியதாக தெரிவித்தார். (2) சுமதி க/பெ.முருகேசன், மருதக்குடி என்பவரும் கிரயப்பத்திர பதிவிற்காக வந்ததாகவும், ரூ.6000/- சத்திவேல் என்ற பத்திர எழுத்தர் அலுவலகத்தில் உள்ள ரவிச்சந்திரன் என்ற பத்திர எழுத்தர் வாங்கியுள்ளதாகவும், அதற்கு விபரம்கேட்ட போது, சார் பதிவாளருக்கு பணம் கொடுக்கவும்

சேர்த்து தான் வாங்கியதாக கூறியதாக தெரிவித்தார். (3) செந்தில்குமார் த/பெ.காளிமுத்து மானோஜிபட்டி என்பவரும் கிரயப்பத்திர பதிவிற்காக வந்ததாகவும், ரூ.6000/- சத்திவேல் என்ற பத்திர எழுத்தர் அலுவலகத்தில் உள்ள ரவிச்சந்திரன் என்ற பத்திர எழுத்தர் வாங்கியுள்ளதாகவும், அதற்கு விபரம்கேட்ட போது, சார் பதிவாளருக்கு பணம் கொடுக்கவும் சேர்த்து தான் வாங்கியதாக கூறியதாக தெரிவித்தார். (4) கண்ணுச்சாமி த/பெ.ராஜமாணிக்கம், நெடுங்குளம் என்பவரும் கிரயப்பத்திர பதிவிற்காக வந்ததாகவும், ரூ.4000/- சத்திவேல் என்ற பத்திர எழுத்தர் அலுவலகத்தில் உள்ள ரவிச்சந்திரன் என்ற பத்திர எழுத்தர் வாங்கியுள்ளதாகவும், அதற்கு விபரம்கேட்ட போது, சார் பதிவாளருக்கு பணம் கொடுக்கவும் சேர்த்து தான் வாங்கியதாக கூறியதாக தெரிவித்தார் மேலும் இவர்கள் அலுவலக வாசலில் நின்றிருந்த ரவிச்சந்திரன் த/பெ.பரமசிவம் என்பவரை அடையாளம் காட்டி அவர்தான் பத்திர எழுத்தர் ரவிச்சந்திரன் என அடையாளம் காட்டினார்கள். அதனால் அவரை அழைத்து விசாரித்தபோது, அவர் தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்து மூக்கு கண்ணாடி பிளாஸ்டிக் டப்பாவை எடுத்து ஆஜர் செய்தார், அதை திறந்து பார்க்க அதில் ரூ.23,280/- சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. இது குறித்து விசாரிக்க, தானும் சக்திவேலும் இன்று 10 பத்திரங்கள் மேற்படி பத்திர அலுவலகத்தில் பதிவு செய்ததாகவும், அதற்குறிய பத்திர எழுத்தர் கட்டணத்தொகை சக்திவேலிடம் உள்ளதாகவும், இந்தப் மூக்கு கண்ணாடி பிளாஸ்டிக் டப்பாவில் வைத்திருந்த பணம் சார்பதிவாளருக்கு கொடுக்க வேண்டிய பணம் என தெரிவித்தார். எனவே மேற்படி தொகை ரூ.23,280/- **நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்டது**. தொடர்ந்து சக்திவேல், ஆவண எழுத்தரை அழைத்து விசாரிக்க, அவர் தன்னிடம் இருந்து ரூ.3510/- எடுத்து ஆஜர் செய்து, இன்று 10 ஆவணகள் எழுதிக்கொடுத்து, பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கு எழுத்துக்கூலி ரூ.3000/- வாங்கிவைத்துள்ளதாகவும், மீதப்பணம் தனது சொந்த பணம் என தெரிவித்ததால், மேற்படி தொகையை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேலும் இந்த திடீர் சோதனையின் போது தனிநபர் பதிவேடு, அலுவலக வருகைபதிவேடு மற்றும் பத்திர பதிவு கணக்கு விபர பட்டியல் ஆகியவை கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது பத்திர எழுத்தர் ரவிச்சந்திரன் சார் பதிவாளருக்கு கொடுக்க வைத்திருந்த மேற்படி தொகை ரூ.23,280/- விபரம்.

| | | |
|---|---|---|
| 2000x2 | Rs.4000 | (1) 3EB279878, (2) 7DN813627 |
| 500x37 | Rs.18500 | (1) 9DQ605572, (2) 6LM137792, (3) 1AU310339,<br>(4) 0CG645422, (5) 8CU442106, (6) 7NP184238,<br>(7) 5WM395380, (8) 3NU684439, (9) 6RU541197,<br>(10) 9DC328234, (11) 8WW034102, (12)1DV991656, |

| | | |
|---|---|---|
| | | (13) 3CE261081, (14) 0LR013300, (15) 9GQ652109, (16) 0BD056908, (17) 2DT456757, (18) 9KP805624, (19) 6TH026607, (20) 4KM891566, (21) 4KM891565, (22) 9PK622114, (23) 6KQ886603, (24) 1US949932, (25) 5CH546360, (26) 6AU460755, (27) 5FT379372, (28) 5RL513016, (29) 9CV558942, (30) 3CE108927, (31) 0DR203359, (32) 9LF189524, (33) 6AU096578, (34) 9HM505823, (35)3HM899028, (36)9KP442185, (37) 1QN028578 |
| 100x7 | Rs.700 | (1) 4FH732768, (2) 3AS619700, (3) 4GF526680, (4) 9QF074534, (5) IQU492709, (6)7DT809217, (7) 9CN273482 |
| 20x2 | Rs.40 | (1)31A836651, (2) 95E701543 |
| 10x4 | Rs.40 | (1) 22H383949, (2) 18V700127, (3) 89P326774, (4) 02T107105 |

இந்த திடீர் சோதனை நடவடிக்கை 12.10.2017ந் தேதி மாலை 19.45 மணிக்கு முடிக்கப்பட்டது.

மேற்படி அறிக்கையின் மீது தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2017 பிரிவு 8 மற்றும் பிரிவு 13(1)(d) r/w 13(2) ஊ. த. சட்டம் 1988 மற்றும் பிரிவு 109 இ.த.ச. படி 12.10.2017 ம் தேதி 21.15 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

முதல் தகவல் அறிக்கையின் அசலையும் மற்றும் திடீர் ஆய்வு நடவடிக்கைகள் ஆகியவற்றையும் கும்பகோணம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் தனி நீதிபதி அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்றை நிலைய கோப்பிவில் வைக்கப்பட்டது.

12/10/17

INSPECTOR OF POLICE
VIGILANCE AND ANTI CORRUPTION
THANJAVUR